

செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி – சிங்கப்பெருமாள் கோவில் இரயில்வே மேம்பாலத்தின் இடையே ரூ.138 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட இடதுபுற மேம்பாலத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் .செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஜெ.சண்முகம், ஆப்பூர் சந்தானம், க. அன்புச்செல்வன், கே.பி.ராஜன், உதயா கருணாகரன், நெடுஞ்சாலை துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி. ஷெனாய் நகர் விளையாட்டு மைதானத்தை சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் இறுதிக்கட்ட பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (29.6.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, விளையாட்டு மைதானத்தை மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வருவதற்கு பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ். முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், உள்ளாட்சிப் பிரதிநிதி கார்த்திக் மோகன், தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மாமன்ற உறுப்பினர் திருமதி. ராணி ரவிச்சந்திரன், மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## நீலகிரி போல் ஏலகிரி மாற்றப்பட வேண்டும்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தாயுள்ளத்துடன் மலைவாழ் மக்களுக்கு உதவுகிறார்!

## அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!



திருப்பத்தூர், ஜூன் 30

நீலகிரி மலையைப்போல் ஏலகிரி மலையும் ஒரு கோடை வாசஸ்தலமாக மாற்றப்பட வேண்டும் என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாயுள்ளத்தோடு தாயுமான வராக மலைவாழ் மக்களுக்கு பல்வேறு வகையில் உதவி வருகிறார் என்று ஏலகிரி மலையில் கோடை விழாவை தொடங்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்துகின்ற ஏலகிரி மலை கோடை விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த விழாவில் ஒரு கோடியே 33 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 37 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற ஒரு விழாவும் இங்கு நடைபெற இருக்கிறது.

கோடை விழா நடைபெறுகின்ற ஏலகிரி என்று சொன்னாலே ஏழைகளின் நீலகிரி என்று சொல்லலாம். தமிழ்நாட்டில் உச்சமாக இருக்கிற நீலகிரி பல மாநிலத்தில் இருக்கிறவர்கள் பல வெளிநாட்டுக்காரர்கள் வந்து செல்கின்ற ஒரு சுற்றுலா தலமாக இருக்கின்றது. ஆனால் ஏழை எளிய மக்கள் வந்து செல்கின்ற ஒரு சுற்றுலா தலமாக ஏலகிரி மலை இருக்கின்றது.

ஏலகிரி மலையில் கோடை விழா என்பது முதல் முதலாக பிரிட்டிஷ் காலத்தில் தான் துவங்கப்பட்டது. இந்த பகுதியில் நடு கற்கள் காணப்பட்டதற்கு உங்கள் உரையில் தெரிவித்தீர்கள். இந்த ஏலகிரி மலை மற்றும் சுற்றி இருக்கின்ற பகுதியில் தற்போதும் கற்காலக் கோடரிகள் கிடைக்கின்றது. கிபி பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு ஏலகிரி மலையில் கண்டெடுக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

### ஐநூற்றுவர் எனும் வணிகர் குழு!

ஐநூற்றுவர் என்ற வணிகர் குழுவை சேர்ந்த வணிகர்கள் இந்த பகுதியில் வர்த்தகம் செய்ததாக கூட குறிப்புகள் இருக்கிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் தனது இலக்கியங்களில் ஏலகிரி மலை பகுதி பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்.

ஏலகிரி மலை தற்போது 14 மலை கிராமங்களை கொண்ட ஒரு பகுதியாக இருக்கிறது. ஏறத்தாழ நாலாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வதாக இந்த ஏலகிரி மலை இருக்கின்றது. இயற்கை பூங்கா, முருகர் கோயில், படகு இல்லம் மலையேற்றம் போன்ற பல சுற்றுலா அம்சங்கள் இங்கு இருக்கின்றது. ஆனாலும் அது போதாது, இந்த ஏலகிரி மலை ஆந்திரா, கர்நாடகா ஒட்டி இருக்கின்ற ஒரு பகுதி, அதனால் அருகில் உள்ள மாநிலத்தவர்களும் இந்த ஏலகிரிமலையை பயன்படுத்தப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இந்த ஏலகிரி மலை பல நிலைகளில் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் 13 நபர்களுக்கு கலைஞர் கனவு இல்லம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 15வது நிதி குழு மானியத்தில் மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி, கிராம ஊராட்சிகளின் மூலமாக 1 கோடியே 92 லட்சம் மதிப்பீட்டில் 56 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாடு பணிகள் நடைபெற்று இருக்கிறது. ரூபாய் 42 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி, கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.1 கோடியே 18 லட்சம் மதிப்பீட்டில் 28 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூபாய் 14 லட்சம் மதிப்பீட்டில் 8 கிராமப்புற வீடுகள் பழுது பார்க்கப்பட்டு இருக்கின்றது. ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் 3 பழங்குடியினர் வீடுகள் இது போன்ற சுமார் 12 கோடியே 13 லட்சம் மதிப்பீட்டில் 291 பணிகள் இந்த ஏலகிரிமலையில் நடைபெற்றிருக்கிறது.

அதேபோன்று ரூ.1 கோடி மதிப்பீட்டில் அத்தனாவூர் நிலாவூர் சாலை ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு அகலப்படுத்தப்பட்டு இருக்கிறது. ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிந்து ஓடும் சிறு பாலம் கட்டுவது வடிக்கால் அமைப்பது போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் அத்தனாவூர் மற்றும் மங்கலம் சாலைகளில் விபத்துகளை தடுப்பதற்காக பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் கொண்டை வளைவுகளில் விபத்துக்களை தடுப்பதற்காக உருளை வடிவிலான உலோக தடுப்பான் அமைக்கப்பட்டுள்ளது. உலோக தடுப்பான் என்பது நான் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு முதன் முதலாக இந்தத் திட்டத்தை கொண்டு வந்தேன்.

### உலோகத் தடுப்பான்

இந்த உலோக தடுப்பான் என்பது அமெரிக்காவில் தான் இருக்கிறது. ஆனால் அமெரிக்காவிற்கு நிகராக தமிழ்நாட்டிலும் இந்த உலோக தடுப்பான் இந்த மலையில் நாங்கள் பயன்படுத்திருக்கின்றோம். அதோடு மட்டுமல்லாது பாதுகாப்பான பயணத்திற்கு எச்சரிக்கை பலகைகள் ஒளிரும் பட்டைகள் சாலைகளில் அமைத்திருக்கின்றோம்.

மேலும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பலமுறை கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் நெடுஞ்சாலைத்துறை நிதிநிலை அறிக்கை அளிப்பதற்கு போவதற்கு முன்பாக முதலமைச்சர் அவர்களிடம் கடைசியாக வாங்கிய அனுமதி நீண்ட நாட்களாக ஊராட்சி சாலையாக, ஊராட்சியின் உடைய ஒன்றிய சாலையாக, ஏலகிரி இணைக்கின்ற வட்டச் சாலை அமைப்பதற்கு 10 கிலோமீட்டர் சாலை முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அறிவிக்க வேண்டும் என்று அடிப்படையில் தான் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் 4 ஊராட்சி சாலைகளை இணைக்கின்ற 10 கிலோமீட்டர் சாலையை அறிவித்திருக்கின்றேன்.

பத்து கிலோ மீட்டர் சாலை 14 கிராமங்களை இணைக்கின்ற சாலை, இங்கு வருவதற்கு முக்கிய காரணமாக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இருந்திருக்கின்றார் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே இந்த நிதியாண்டிலேயே அந்த பணிகள் செய்து முடிப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஆட்சியில் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் 15 கிலோமீட்டர் சாலைகள் ஏலகிரி மலை அகலப்படுத்துகின்ற உறுதிப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏலகிரி மலை பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு சாதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

நான்காண்டு காலத்தில் முதலமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை பார்த்து பார்த்து செய்திருக்கிறார்கள். இந்த மலைவாழ் மக்களுக்கு ஹீமோகுளோபின் அளவு குறைவாக உள்ளது அதனை கண்ட முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் மரபணு அட்டை கொடுத்து வீட்டுக்கு வீடு மாத்திரைகள் கொடுப்பதினால் ஹீமோகுளோபின் அதிகமாகிவிடும் என்று அந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

ஏலகிரி மலையில் இருக்கின்ற மக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, ஏலகிரி மலை மக்களுக்கும் தாயாக தாயுள்ளம் கொண்ட தாயுமானவராக தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்றார். கோரிக்கை வைத்த ஊராட்சி மன்ற தலைவர் அவர்களையும் சேர்த்து சொல்கின்றேன்.

இந்த ஏலகிரி மலைக்கு பல திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றோம், கொண்டு வருவோம் கொண்டு வருவதற்கு காரணமாக இருந்த முதலமைச்சர் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து என்றைக்கும் அவரோடு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

---

## தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

# 131 அ வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை

சென்னை, ஜூன் 30 -

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி 131 அ வட்ட பாக முகவர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

அது வருமாறு

131 அ வட்ட பாக முகவர்கள் கூட்டம் இன்று (30.06.2025 திங்கட்கிழமை) மாலை 7.00 மணி அளவில் வட்ட அவைத் தலைவர் ராசி முருகன் தலைமையில் பாக முகவர்கள் மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BLA, BDA) மற்றும் நிர்வாகிகள் கூட்டம் அறிஞர் அண்ணா பொதுநல மன்றத்தில் நடைபெற உள்ளது. எனவே 131அ வட்டத்தில் உள்ள அனைத்து (பாக முகவர்கள் மற்றும் பாக தொழில்நுட்பம் முகவர்கள் BLA, BDA) அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இரும்பூலியூர் டி.டி.கே.நகர் சுரங்கபாதை அருகில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குனர் மதுசூதன்ரெட்டி. ஆய்வு மேற்கொண்டார். உடன் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ அவர்களும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர் 4,வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ், 53,வது வட்ட மாமன்ற உறுப்பினர்டி .ஆர்.கோபி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் தாம்பரம் மாநகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

---

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக

# பாக முகவர் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) 'APP' மூலம் உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சிக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு:



தமிழ்நாடு முதல்வர் - அன்புத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர்கள் சேர்ப்பு திட்டத்தின் கீழ் வீடு - வீடாகச் சென்று கழக உறுப்பினர் சேர்க்கையின் போது, 'APP' மூலம் உறுப்பினர் பதிவு செய்யும் விவரங்களை உள்ளீடு செய்வது சம்மந்தமாக,

வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆகியோருக்கு பயிற்சி அளிக்கும் கூட்டங்கள், தொகுதி வாரியாக ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் கீழ்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

இக் கூட்டங்களை அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக செயலாளர்கள் ஒன்றிணைந்து நடத்தி தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நாள்: 3.07.2025 (வியாழக்கிழமை) காலை - மாலை**

| சட்டமன்றத் தொகுதி | ஒன்றியம் – நகரம் – பகுதி – பேரூர் | நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| ஆலந்தூர் தொகுதி | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | காலை 9.00 மணி | கோவிந்தராஜ் திருமண மண்டபம், பெரியபணிச்சேரி |
| | ஆலந்தூர் வடக்கு – தெற்கு பகுதி, கண்டோன்மெண்ட் நகரம் & புனிததோமையார் மலை ஒன்றியம் | மாலை 4.00 மணி | மாவட்ட கழக அலுவலகம், ஆலந்தூர் கத்திப்பாரா |
| திருப்பெரும்புதூர் தொகுதி | திருப்பெரும்புதூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் & திருப்பெரும்புதூர் நகரம் | மாலை 4.00 மணி | பிரம்மசக்தி மகால் வல்லக்கோட்டை |
| | குன்றத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம், குன்றத்தூர் நகரம், மாங்காடு நகரம் | | |
| பல்லாவரம் தொகுதி | பம்மல் வடக்கு – தெற்கு பகுதி & புனிததோமையார் மலை ஒன்றியம் | காலை 9.00 மணி | வசந்தம் திருமண மண்டபம் பல்லாவரம் |
| | பல்லாவரம் வடக்கு – தெற்கு பகுதி & செம்பாக்கம் வடக்கு பகுதி | | |
| தாம்பரம் தொகுதி | செம்பாக்கம் தெற்கு பகுதி, தாம்பரம் கிழக்கு பகுதி & புனிததோமையார் மலை ஒன்றியம் | மாலை 4.00 மணி | வாசுதேவா திருமண மண்டபம் கிழக்கு தாம்பரம் |
| | பெருங்களத்தூர் வடக்கு – தெற்கு பகுதி & தாம்பரம் மேற்கு பகுதி | | |
| செங்கல்பட்டு தொகுதி | காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம், மறைமலைநகர் நகரம் | காலை 9.00 மணி | ஆழ்வார் பேலஸ் திருமண மண்டபம், மறைமலை நகர் |
| | செங்கல்பட்டு நகரம், காட்டாங்கொளத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம் | மாலை 4.00 மணி | நகராட்சி சமுதாயக்கூடம் செங்கல்பட்டு |
| திருப்போரூர் தொகுதி | திருப்போரூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் & பேரூர் | காலை 9.00 மணி | கணேஷ் மகால் திருப்போரூர் |
| | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் & பேரூர், மாமல்லபுரம் நகரம் | மாலை 4.00 மணி | வி.ஜி.டி.எஸ். திருமண மண்டபம்திருக்கழுக்குன்றம் |

எனவே, இத்தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் கூட்டத்தை (BDA) அந்தந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய நகர – பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் இணைந்து சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, இக்கூட்டங்களில் அந்தந்த தொகுதியில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்டுகளை (BDA) பங்கேற்கச் செய்து அவர்களுக்கு பயிற்சி அளிக்க உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர் – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

# இராயபுரம் கிழக்குப் பகுதி 49வது வட்ட பாகமுகவர்கள் கூட்டம்!

## வட்டப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் அறிக்கை!

சென்னை, ஜூன்.30-

இராயபுரம் 49வது வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும்(BLA2) பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரீம் இரா.மூர்த்தி, சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் சுபேர்கான், இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் ஆலோசனைப்படி இன்று (30.6.2025 - திங்கட்கிழமை) மாலை 7 மணி அளவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் வே.சிவகுமார் அலுவலகத்தில் (எண்.51, அப்பா சாமி லைன், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21) வட்ட கழக அவைத் தலைவர் எம்.பழனி தலைமையில் நடைபெற உள்ளது.

அதுபோது கழகத் தலைவர் அறிவித்துள்ள ஓரிணியில் தமிழ்நாடு ஆன்லைன் உறுப்பினர் சேர்க்கை மற்றும் BLC உறுப்பினர்கள் நியமனம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்ட உள்ளது.

எனவே கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள் (BLA2) பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டிசேகர் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி, பெரம்பூர் வடக்கு பகுதி, 35 வது வட்டம், 1 வது பிளாக்கில் வசிக்கும் ராதாவிற்கு புதிய இஸ்திரி பெட்டி, இஸ்திரி வண்டியினை மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகான் வழங்கினார். உடன் எ.ஷேக் அப்துல்லா, ஆசிரியர் அய்யனார், எ.நாசர் கான், எஸ்.என்.ஆனந்த், என்.சையத்அகமதுகபீர், எச்.அப்துல்நசீர், எ.ஜாகிர்உசேன், ஜெயச்சந்திரன், யு.வாகிதா உமர், பன்னீர்செல்வம், ஏழுமலை, யு.ஆயிசா, ஐ.சாகிரா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.